
# இயேசு கதைகளைக் கூறுவதில் சிறந்தவர்

இயேசுவின் கதைகளைக் கற்று பிறருக்குக் கூற சிறுவர்களுக்கு உதவுங்கள்.

**ஜெபம்:** "இயேசுவின், மன்னிக்க மறுத்த ஊழியக்காரனைப் பற்றிய கதையில் இருந்து, பிறரை மன்னிக்க சிறுவர்கள் கற்றுக் கொள்ளும் படியாக உதவுவீராக."



இந்த சிறுவர் கல்வி நடவடிக்கைகளில் இருந்து எதை வேண்டுமாயினும் தெரிந்து கொள்க.

சிறுவர்கள் இந்தப் படத்தைப் பார்த்து **வரையட்டும்.**

மன்னிக்க மறுத்த ஊழியக்காரனைப் பற்றிய கதையை ஒரு பெரிய பிள்ளையோ, ஆசிரியரோ **வாசிக்கட்டும் அல்லது கூறட்டும்** (மத் 18:21-34). நமக்கு தீமை செய்தவர்களையும் நாம் மன்னிக்க வேண்டும் என்பதை விளக்க இயேசு எவ்வாறு கதையைப் பயன்படுத்தினார் என்பதை இது கூறுகிறது.

கதையைக் கூறிய பின் கீழ்க்காணும் **கேள்விகளைக்** கேட்கவும். (பதில் ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும்)

- மக்களை மன்னிப்பதை நாம் எப்போதாவது நிறுத்திவிட வேண்டுமா? *(வச.21 நாம் எப்போதும் மன்னிக்க வேண்டும்.)*
- தனது கடனைத் திருப்பி செலுத்த முடியாது நிலையில் இருந்த ஊழியக்காரனுக்கு எஜமானன் என்ன செய்தான்? *(27)*
- தனக்குக் கடன்பட்டிருந்த இன்னொரு வேலைக்காரனுக்கு இந்த ஊழியக்காரன் என்ன செய்தான்? *(30)*
- எஜமானன் இதற்கு என்ன நடவடிக்கை எடுத்தான்? *(34)*
- நமக்கு தீமை செய்தவர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று பரலோகில் இருக்கும் நமது கர்த்தர் விரும்புகிறார்? *(35)*

மன்னிக்காத இந்த ஊழியக்காரனைப் பற்றிய கதையை **நாடகமாக்குக.** சபைத் தலைவரோடு பேசி பிள்ளைகள் இந்த நாடகத்தை **அரங்கேற்ற** ஏற்பாடு செய்யவும். உங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த நாடகத்தை பிள்ளைகள் தயாரிக்க உதவுங்கள். எல்லா பகுதிகளையும் பயன் படுத்த தேவை இல்லை. பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு உதவட்டும்.

- **பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள், கதைகூறுபவர், எஜமானன்**( காகிதத்தை வைத்துக் கொள்ளவும்). **நன்றிகெட்ட ஊழியக்காரன்** ஆகிய வேடத்தை ஏற்கட்டும்.
- **சிறிய பிள்ளைகள்,** பேதுரு, நண்பர்கள், சிறைக்காவலர்கள், இரண்டாவது ஊழியக்காரன் ஆகிய வேடங்களை ஏற்கவும்.

**கதைகூறுபவர்:** வசனம் 21-27லிருந்து கதையின் முதற்பகுதியைக் கூறவும். பின் கூற வேண்டியது, "பேதுரு இயேசுவிடம் என்ன கேட்டார் என்பதைக் கேளுங்கள்."

**பேதுரு** : அண்ணாந்து பார்த்து கூறுவது, "கர்த்தாவே, என்னுடைய சகோதரனை நான் எத்தனை தடவை மன்னிக்க வேண்டும்?"

**கதை கூறுபவர்:** "இயேசு, ஒரு எஜமானனும் அவனுடைய ஊழியக்காரனும் பற்றிய கதை மூலமாக இதற்கு பதில் அளித்தார். ஊழியக்காரன் தன் எஜமானனுக்கு நிறைய கடன் பட்டிருந்தான். எஜமானன் கூறுவதைக் கேளுங்கள்."

**எஜமானன்:** "இந்த காகிதம் நான் உனக்கு கொடுத்துள்ள கடனுக்கான ஒப்பந்தப் பத்திரம். நீ எனக்கு திரும்பி தர வேண்டிய கடன்பாக்கி ஏராளமாய் இருப்பதை இது காட்டுகிறது. என் கடனை நீ திருப்பித்தராவிட்டால் உன்னையும் உன் குடும்பத்தையும் அடிமைகளாக விற்றுவிடுவேன்!"

**நன்றிகெட்ட ஊழியக்காரன்:** பணிந்து கெஞ்சுகிறான், "ஐயா! இரக்கம் காட்டும்! நான் திருப்பிக்கட்டி விடுவேன்."

**எஜமானன்:** காகிதத்தைக் கிழித்துப் போட்டுவிட்டு, "சரி ! நான் உனக்கு இரக்கம் காட்டுகிறேன். உன் கடனை எல்லாம் நான் மன்னித்து விடுகிறேன்!"

**கதைகூறுபவர்:** வசனம் 28-35 லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். பின் கூறுவது, "நன்றி கெட்ட ஊழியக்ாரன் என்ன செய்தான் என்பதைக் பாருங்கள்!"

**நன்றிகெட்ட ஊழியக்காரன்:** எஜமானனை விட்டு நடந்து போய், இரண்டாவது வேலைக்காரனை பிடித்து மிரட்டுகிறான், "என்னிடம் வாங்கிய கடன் முழுவதையும் இப்போதே கொடு!"

**இரண்டாவது வேலைக்காரன்:** பணிந்து கெஞ்சுகிறான், "ஐயா, இரக்கம் காட்டுங்கள்! நான் விரைவில் திருப்பி தந்து விடுவேன்.!"

**நன்றி கெட்ட ஊழியக்காரன்:** "முடியாது! சிறைக்காவலர்களே! இவனைப் பிடித்து இழுத்துப் போங்கள்!"

**சிறைக்காவலர்கள்:** இரண்டாவது வேலைக்காரனை இழுந்து சென்றபடி "நீ பட்ட கடனை கொடுத்து முடிக்கும் வரை சிறையில் கிட!"

**நண்பர்கள்:** எஜமானனிடம் சென்று, "ஐயா, நீர் மன்னித்து விட்டுவிட்ட ஊழியக்காரன் மற்றவர்களை மன்னியாது இருக்கிறான். சிறு தொகை கடன்பட்ட இன்னொருவனை சிறையில் போட்டு விட்டான்!"

**எஜமானன்:** நன்றிகெட்ட ஊழியக்காரனை அழைக்கிறான்: "இங்கே வா!" (நன்றிகெட்ட ஊழியக்காரன் வருகிறான்.)

**நன்றிகெட்ட ஊழியக்காரன்:** எஜமானன் அருகில் ஒடி பணிந்து கொண்டு "இரக்கமுள்ள மாபெரும் பிரபுவே! நான் உமது கட்டளைக்காக காத்து இருக்கிறேன்.!"

**எஜமானன்:** (கோபத்துடன்), "நான் உனக்கு மன்னித்தது போல நீ ஏன் மன்னிக்க வில்லை? சிறைக்காவலர்களே இவனை சிறையில் அடையுங்கள்."


**சிறைக்காவலர்கள்:** நன்றி கெட்ட ஊழியக்காரனை இழுத்துச் செல்லுகின்றனர்: "கடனை செலுத்தி முடிக்கும் வரை நீ சிறையில் கிடப்பாய்!"

**கதை கூறுபவர்** அல்லது ஒரு **பெரிய குழந்தை:** உதவி செய்தவர்களுக்கு நன்றி கூறுக.

**பிள்ளைகள்** இந்தக் கதையைப் பெரியவர்களுக்கு **நாடகமாக்கினால்** மேலே உள்ள கேள்விகளைப் பெரியவர்களிடம் கேட்கவும்.

தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றி மக்களுக்குப் போதிக்க இயேசு கூறிய கதைகளுக்கு வேறு உதாரணங்கள் என்ன (சிறுவர்கள் உதாரணம் தருக.)

இராஜாவின் மணிமுடியை **வரைக.** பிள்ளைகள் அதைப் பார்த்து வரைந்து, அடுத்த ஆராதனையின் போது பெரியவர்களிடமும், வீட்டில் பெற்றோர்களிடமும் காட்டவும்.



- இராஜ கிரிடம் இயேசுவின் கதைகளைக் குறிக்கிறது என்று விளக்கவும்.
- தேவனே நமது ஆவிக்குரிய இராஜா. நம்முடைய எல்லாமே அவருடையதுதான்.
- சிலசமயம், நாம் எவ்வாறு சேவை செய்ய வேண்டுமோ அவ்வாறு அவருக்கு சேவை செய்வது கிடையாது. ஆனாலும் அவர் நம்மை மன்னிக்கிறார்.
- நமது எஜமானராகிய இயேசு நம்மை மன்னித்து விட்டது போலவே நாமும் பிறரை மன்னிக்க வேண்டும்.

கொலோ. 3:16 ஐ **மனப்பாடம்** செய்க.

**சங்கீதம்** 45:1,2,4, ஐ மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கட்டும்.

வார நாட்களில், **பெரிய பிள்ளைகள்** உண்மையுள்ள ஊழியர்களைக் குறித்த இயேசுவின் கதையைப் பற்றி பாடல்கள், கவிதைகள், நாடகங்கள் எழுதட்டும்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தரும் இராஜாவுமானவரே, எங்களிடத்தில் உள்ள யாவும் உம்மிடத்தில் இருந்து வந்த ஆசீர்வாதங்களே. நீர் எங்கள் பாவங்களை எல்லாம் மன்னித்து தீமைகளில் இருந்து விலக்குகிறீர். சில நேரங்களில் இதை நாங்கள் மறந்து, பிறரை மன்னிக்க தவறிவிடுகிறோம். உம்மைப் போலவே மன்னிக்க எங்களுக்கு உதவும்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net